

முதலமைச்சர் அவர்கள் 29.05.2025 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை விரிவாக்க சேவைகளை உழவர்களுக்கு அவர்களின் கிராமங்களிலேயே வழங்கிடும் வகையில் "உழவரைத்தேடி வேளாண்மை உழவர் நலத்துறை திட்டத்தினை காணொலிக் காட்சி வாயிலாக திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டாரம், மாணிக்கமங்கலம் கிராமத்தில் தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரம், ஆலவயல் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்துகொண்டு, தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறையின் சார்பில் விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகளை வழங்கினார். உடன், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திருமதி.தெய்வநாயகி, இணை இயக்குநர் (வேளாண்மை) திருமதி.மு.சங்கரலட்சுமி, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் திருமதி.சுந்தரி அழகப்பன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 102-வது பிறந்த நாள்

# 102 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி!

## நாமக்கல் கிழக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

நாமக்கல், ஜூன். 2-

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளில்

102 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குவது என கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி தலைமையில் நடைபெற்ற நாமக்கல் கிழக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மாவட்ட அவை தலைவர் சி.மணிமாறன் தலைமையில் நடைபெற்றது. தேர்தல் பொறுப்பாளர்கள் சேலம் முன்னாள் மேயர் ரேகா பிரியதர்ஷினி, முனவர் ஜான், சட்டமன்ற உறுப்பினர்கள் கே.பொன்னுசாமி, பெ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டுகூட்டப்பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர்கள் நலங்கிள்ளி, ராணி பெரியண்ணன், பொருளாளர் ஏ.கே.பாலச்சந்திர், மாநில நிர்வாகிகள் நாமக்கல் ப.ராணி, சி.ஆனந்தகுமார், ப.கைலாசம்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.இராமசுவாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் மாயவன், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி மற்றும் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் திமுக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தமிழ் இனத்தின் தலைவராக நவீன தமிழகத்தின் சிற்பி நம் நினைவில் வாழும் முத்தமிழறிஞர் டாக்டர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளினை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் ஜூன்3 ஆம் நாள் 102 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குவது,

முத்தமிழறிஞர் டாக்டர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளினை சிறப்பாக கொண்டாடும் வகையில் நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் முத்தமிழறிஞர் டாக்டர் தலைவர் கலைஞர் அவர்களின் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, நலதிட்ட உதவிகள் வழங்கவும், பள்ளி குழந்தைகளுக்கு நோட்டு, புத்தகம் வழங்குதல், மரக்கன்று நடுதல், ஏழை எளிய மக்களுக்கு உணவு வழங்குதல், என பல்வேறு நலத்திட்ட உதவிகளை நாமக்கல் கிழக்கு மாவட்டம் முழுவதும் மேற்கொள்ள வேண்டும்,

மேலும் அனைத்து வார்டு, கிளைகளிலும் வழங்குகின்ற நலத்திட்ட உதவிகளின் புகைப் படங்களை மாவட்ட கழக அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள்!

# தருமபுரி கிழக்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

## மாவட்டச் செயலாளர் ஆ.மணி எம்.பி. அறிக்கை!



தருமபுரி, ஜூன். 2-

முத்தமிழறிஞர் தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவினை மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவீர் - என தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

நாளை (ஜூன் 3) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவினை செம்மொழி நாளாக கொண்டாட வேண்டுமென அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர,பேரூர், வார்டு, கிளைக்கழகங்கள் உள்ளிட்ட 845 இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தியும்,இளைஞர்கள்,

பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்திப் பரிசுகளை வழங்கியும்,ஏழை, எளிய மாணவியர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கியும் சிறப்பாக கொண்டாட வேண்டும்.

நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் தருமபுரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,

நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், நகர,பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், இளைஞரணி, மாணவரணி,மகளிரணி, இலக்கிய அணி,கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, வர்ததகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு,தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி,விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல் அணி,அமைப்பு சாரா தொழிலாளர் அணி,அயலக அணி,தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகி கள் மற்றும் கழக முன்னோடி கள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. இளைஞரணி ஆலோசனைக் கூட்டம் நாகையில் நடைபெற்றது. கூட்டத்தில் வார்டுகளில் இளைஞரணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிப்பதற்கான படிவத்தை நாகை நகரக் கழகச் செயலாளர் நகர் மன்றத் தலைவர் மாரிமுத்து வழங்கினார். உடன் நாகை நகர இளைஞரணி அமைப்பாளர் ஆர் எஸ் சத்தியம் மற்றும் பலர் உள்ளனர்



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் குட்டியாண்டியூரில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.6.83 கோடி மதிப்பில் மீன் இறங்குதளம் கடல் அரிப்பை தடுக்கும் திட்டப்பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து குட்டியாண்டியூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் – பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் எஸ்.ஸ்ரீகாந்த்பூம்புகார் ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்தார்கள். உடன் மின்வளத் துறை அதிகாரிகள், கழகத்தினர் உள்ளனர்.







ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணிக்கு புதிதாக அறிவிக்கப்பட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் கழக இளைஞரணி நிர்வாகிகள் அறிமுக கூட்டம் மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் மாநில இளைஞரணி மாநில துணை செயலாளரும், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினருமான கே.இ.பிரகாஷ், பி.எஸ்.சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் வரவேற்பில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் மீனா ஜெயக்குமார், மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம் மேயர் சு.நாகரத்தினம், துணை மேயர் வி.செல்வராஜ், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் கி.ரகுராம், எஸ்.சதீஷ்குமார், எஸ்.எஸ்.விஜயராகவன், இரா.நித்தின், ஜாகீர் உசேன், ஜே.ரமேஷ், பெ.சீனிவாசன், அ.பார்த்திபன், எஸ்.சசிகுமார், அ.அன்பரசன், நவீன்குமார், க.இளமாறன் பெ.டி.சேந்தபுகழன் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாளை முன்னிட்டு

# திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதி - ஒன்றிய - நகர - பேரூர்க் கழகங்களில் கழகக் கொடியேற்று விழா!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவிப்பு!



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வதுபிறந்தநாளை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் கொடியேற்று விழா!

03/06/2025 செவ்வாய்க்கிழமை அன்று பகுதிகள், ஒன்றியங்கள், நகரங்கள் மற்றும் பேரூர் பகுதிகளில் கழக கொடியேற்றி, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி,பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதை பார்வையிடவும், பங்கு கொள்ளவும் மாவட்ட கழகத்தின் சார்பாக பங்குபெறும் பிரதிநிதிகள் கீழ்வரும் வட்டங்கள், வார்டுகள், மற்றும் கிளை கழகங்களில் மாவட்ட கழகத்தின் சார்பில் வருகை தரும் பிரதிநிதிகளை தொடர்பு கொண்டு விழாவுக்கு வருகையை உறுதி செய்து விழா சிறப்பாக நடத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

| பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் | தலைமை | மாவட்ட கழகத்தின் சார்பில் அனுப்பப்படும் பிரதிநிதிகள் | மாநகர வார்டு / ஒன்றிய ஊராட்சிகள் / நகர வார்டு, பேரூர் வார்டுகளில் கொடியேற்றும்இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மலைக்கோட்டை பகுதி | ஆர்.மோகன் பகுதி கழக செயலாளர் | என்.செந்தமிழ்செல்வன் மாவட்ட அணி அமைப்பாளர் | 10 |
| மார்க்கெட் பகுதி | ஆர்.ஜி.பாபு பகுதி கழக செயலாளர் | A.சந்திரமோகன் மாநகர துணை செயலாளர் | 8 |
| பாலக்கரை பகுதி | டி.பி.எஸ்.எஸ்.ராஜ் முகமது பகுதி கழக செயலாளர் | வண்ணை அரங்கநாதன் தலைமை செயற்குழு உறுப்பினர் | 10 |
| கலைஞர் நகர் பகுதி | ஜி.மணிவேல் பகுதி கழக செயலாளர் | ப.கிருஷ்ணகோபால் மாவட்ட அணி அமைப்பாளர் | 10 |
| அரியமங்கலம் பகுதி | ஏ.எம்.ஜி.விஜயகுமார் பகுதி கழக செயலாளர் | கோ.ரமேஷ் மாவட்ட அணி அமைப்பாளர் | 8 |
| பொன்மலை பகுதி | இ.எம்.தர்மராஜ் பகுதி கழக செயலாளர் | வேங்கூர் வி.தனசேகர் பொதுக்குழு உறுப்பினர் | 10 |
| காட்டூர் பகுதி | ஒ.நீலமேகம் பகுதி கழக செயலாளர் | N.தமிழ் செல்வன் மாநகர பொருளாளர் | 8 |
| திருவெறும்பூர் பகுதி | எஸ்.சிவகுமார் பகுதி கழக செயலாளர் | பொன்செல்லையா மாநகர துணை செயலாளர் | 8 |
| திருவெறும்பூர் வடக்கு | கே.எஸ்.எம்.கருணாநிதி ஒன்றிய கழக செயலாளர் | கே.என்.சேகரன் தலைமை செயற்குழு உறுப்பினர் | 11 |
| திருவெறும்பூர் தெற்கு | சி.கங்காதரன் ஒன்றிய கழக செயலாளர் | லீலாவேலு மாவட்ட கழக துணை செயலாளர் | 9 |
| மணப்பாறை ஒன்றியம் | சி.இராமசாமி ஒன்றிய கழக செயலாளர் | அ.த.த.செங்குட்டுவன் மாவட்ட கழக துணை செயலாளர் | 14 |
| மருங்காபுரி வடக்கு | சி.செல்வராஜ் ஒன்றிய கழக செயலாளர் | இரா.மூக்கன் மாவட்ட கழக துணை செயலாளர் | 17 |
| மருங்காபுரி தெற்கு | சி.சின்ன அடைக்கண் ஒன்றிய கழக செயலாளர் | என்.கோவிந்தராஜ் மாவட்ட அவைத்தலைவர் | 15 |
| மருங்காபுரி மத்தியம் | எம்.பழனியாண்டி ஒன்றிய கழக செயலாளர் | உ.ராஜேஸ்வரன் பொதுக்குழு உறுப்பினர் | 17 |
| வையம்பட்டி வடக்கு | ஆர்.சீரங்கன் ஒன்றிய கழக செயலாளர் | ஆர்.மணிமேகலை பொதுக்குழு உறுப்பினர் | 9 |
| வையம்பட்டி தெற்கு | வி.ஏ.ராஜநேதிரன் ஒன்றிய கழக செயலாளர் | கே.கே.கே.கார்த்தி பொதுக்குழு உறுப்பினர் | 9 |
| துவாக்குடி நகரம் | இ.காயாம்பு நகர கழக செயலாளர் | இரா.குணசேகரன் மாவட்ட கழக பொருளாளர் | 21 |
| மணப்பாறை நகரம் | மு.ம.செல்வராஜ் நகர கழக செயலாளர் | ந.செந்தில் மாநில நிர்வாகி | 27 |
| கூத்தைப்பார் பேரூர் | கே.தங்கவேல் பேரூர் கழக செயலாளர் | பி.ஜெய நிர்மலா மண்டல குழு தலைவர் | 18 |
| பொன்னம்பட்டி பேரூர் | கே.ஏ.நாகராஜ் பேரூர் கழக செயலாளர் | பி.எம்.சபியுல்லா தலைமை செயற்குழு உறுப்பினர் | 15 |

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் கழக தொண்டர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.